மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.02/2023
அ.வ.எண்.123/2023

ராஜி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. தாயம்மாள்
2. நல்லம்மாள்
3. சின்னப்பொண்ணு
4. தங்கவேல்
5. பழனிசாமி
6. விஜியா
7. பழனிசாமி
8. S.ரதி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 06.02.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.வேல்முருகன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஈஸ்வரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 3, 4 ம் எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டும், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், 8 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.முத்தமிழ் செல்வன் அவகள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையின் அடிப்படையில் நீதிமன்றம் தகுந்த உத்தரவு பிறப்பிக்கலாம் என மேற்குறிப்பு செய்தும், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்தும், 8 ம் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும், 8 ம் எதிர்மனுதாரர் தன் தரப்பு வழக்கை எடுத்துரைக்க முன் வராததால், 8 ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டதாக கருதப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39 விதிகள் 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) வாதி/மனுதாரரால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேச்சேரி கிராம ச.எண்.311/4A4 ல் அமைந்துள்ள மனு சொத்தான 0.22 செண்ட் நிலம் உட்பட மேலும் சில நிலங்கள் 1974 ம் வருட குடும்ப பாகப்பிரிவினைப்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்டு, அவற்றின் சுவாதீன அனுபவத்தில் மனுதாரர் இருந்து வருகிறார். இருப்பினும் தாவா சொத்திற்குரிய பட்டா எண்.734 ஆனது மனுதாரரின் தந்தை சின்னப்பகவுண்டர் பெயரிலேயே தொடர்ந்து இருந்து வந்தது. அதனால் மேற்படி பட்டாவை தன் பெயரில் மாற்ற கோரி மனுதாரர் வருவாய்துறையில் மனு அளித்து அதன் பேரிலான நடவடிக்கைகள் தற்போது நிலுவையில் உள்ளது.

(ii) மேலும் தனது அனுபவத்திலுள்ள தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களிலிருந்து 3 செண்ட் நிலத்தை மனுதாரர் கடந்த 16.06.2023 ம் தேதியில் மேச்சேரி பஞ்சாயத்திற்கு தானமாக வழங்கியுள்ளார். 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் சகோதர, சகோதரிகள் ஆவர். 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் மற்றொரு சகோதரர் காலம் சென்ற கோபால் என்பவரின் வாரிசுகள் ஆவர். 8 ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் மற்றொரு சகோதரர் காலம்சென்ற சுந்தரம் என்பவரின் வாரிசு ஆவார். மனு சொத்தை மேற்படி எதிர்மனுதாரர்கள் அனைவரும் 3 ம் நபர்கள் ஆவர்.

(iii) மனு சொத்தை மனுதாரர் வளப்படுத்தி வைத்துள்ளதை கண்டு பொறாமையுள்ள எதிர்மனுதாரர்கள் மனுசொத்திலுள்ள மனுதாரரின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு பல்வேறு இடையூறுகள் செய்து வந்தனர். இந்நிலையில் கடந்த 16.06.2023 ம் தேதியில் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து

மனுதாரரின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்தனர். எனவே மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2) 1, 2 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்

மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லதக்கதல்ல. மனு சொத்து ஆதியில் மனுதாரர் மற்றும் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் சின்னப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டதாகும். மனு சொத்து உட்பட இதர குடும்ப சொத்துக்களை சின்னப்பகவுண்டரும், அவரது வாரிசுகளும் கூட்டாக அனுபவித்து வந்த நிலையில், கடந்த 1974 ம் வருடம் மொத்தம் 4.10 ஏக்கர் நிலம் வாய்மொழி பாகப்பிரிவினை செய்யப்பட்டது. அதில் ச.எண்.311/4A4 ல் மனு சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள 0.22 சென்ட் நிலமானது மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டவையாகும். ஆனால் மேற்படி சங்கதிகளை மறைத்து மேற்படி எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டி மோசடியாக தன் பெயரில் பட்டா மாற்றம் செய்ய மனுதாரர் முயன்று வருகிறார். மனு சொத்தின் பேரில் உள்ள மனுதாரரின் தனிப்பட்டா சுவாதீனத்தை காண்பிக்க எவ்வித ஆவணங்களும் இல்லை. எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 2 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) 5 ம் பிரதிவாதி தனக்காகவும் 6, 7 பிரதிவாதிகளுக்காகவும் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் 6, 7 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்

மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லதக்கதல்ல. சின்னப்பகவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 1974 ம் வருடம் அவரது வாரிசுகளுக்கு பாகம் பிரித்து கொடுத்து தனித்த சுவாதீனமும் கொடுத்துவிட்டார். அவ்வாறாக பாகம் பெற்ற அனைவரும் (வாதியை தவிர) நீண்ட

நாட்களுக்கு முன்பே 7ம் எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்து அவர் சுவாதீன அனுபவத்தில் உள்ளார். மனுதாரர் மட்டுமே தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் ஒரு பகுதியை 1977ம் வருடம் விற்பனை செய்துவிட்டும், 3 சென்ட் நிலத்தை பாதைக்காக கொடுத்தும், மீதமுள்ள 22 சென்ட் நிலத்தை தனது சுவாதீனத்தில் வைத்தும் நாளது தேதி வரை அனுபவத்தில் உள்ளார். அதனால் தாவா சொத்து மனுதாரருக்கு மட்டுமே பாத்தியப்பட்டது. வழக்கை அனுமதிப்பதில் ஆட்சேபனை இல்லை என தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

<u>4) 8ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் 8ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>

மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லதக்கதல்ல. மனு சொத்து பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்தாகும். மனுதாரர் கூறுவதுபோல் வாய்மொழி பாகப்பிரிவினை ஏதும் ஏற்படவில்லை. மனு சொத்தில் மனுதாரருக்கு தனிப்பட்ட சுவாதீனம் இல்லை. மனு சொத்தின் ஒரு பகுதியை மனுதாரர் மேச்சேரி பஞ்சாயத்திற்கு தானம் அளித்துள்ளார் என்பதாலேயே மனுசொத்தில் மனுதாரருக்கு தனிப்பட்ட சுவாதீனம் உள்ளது என கூற இயலாது. 8ம் எதிர்மனுதாரருக்கு மனு சொத்தில் பாகம் உள்ளது. கூட்டுரிமையாளருக்கு எதிராக மனுதாரருக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற இயலாது. எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 8ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

5) மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையின் அடிப்படையில் நீதிமன்றம் தகுந்த உத்தரவு பிறப்பிக்கலாம் என மேற்குறிப்பு செய்தும், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்தும், 8ம் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும், 8ம் எதிர்மனுதாரர் தன் தரப்பு வழக்கை எடுத்துரைக்க முன் வராததால், 8ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டதாக கருதப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

6) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

7) பிரச்சினைக்கான தீர்வு :–

(i) மனுதாரர் தரப்பில் மேச்சேரி கிராம ச.எண்.311/4A4 ல் அமைந்துள்ள மனு சொத்தான 0.22 செண்ட் நிலம் உட்பட மேலும் சில நிலங்கள் 1974 ம் வருட குடும்ப பாகப்பிரிவினைப்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்டு, அவற்றின் சுவாதீன அனுபவத்தில் மனுதாரர் இருந்து வருகிறார் என்றும், இருப்பினும் தாவா சொத்திற்குரிய பட்டா எண்.734 ஆனது மனுதாரரின் தந்தை சின்னப்பகவுண்டர் பெயரிலேயே தொடர்ந்து இருந்து வந்ததால் மேற்படி பட்டாவை தன் பெயரில் மாற்ற கோரி மனுதாரர் வருவாய்துறையில் மனு அளித்து அதன் பேரிலான நடவடிக்கைகள் தற்போது நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ii) மேலும் தனது அனுபவத்திலுள்ள தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களிலிருந்து 3 செண்ட் நிலத்தை மனுதாரர் கடந்த 16.06.2023 ம் தேதியில் மேச்சேரி பஞ்சாயத்திற்கு தானமாக வழங்கியுள்ளார் என்றும், 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் சகோதர, சகோதரிகள் என்றும், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் மற்றொரு சகோதரர் காலம் சென்ற கோபால் என்பவரின் வாரிசுகள் என்றும், 8 ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் மற்றொரு சகோதரர் காலம்சென்ற சுந்தரம் என்பவரின் வாரிசு என்றும், மனு சொத்தை மேற்படி எதிர்மனுதாரர்கள் அனைவரும் 3 ம் நபர்கள் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iii) மேலும் மனு சொத்தை மனுதாரர் வளப்படுத்தி வைத்துள்ளதை கண்டு பொறாமையுள்ள எதிர்மனுதாரர்கள் மனுசொத்திலுள்ள மனுதாரரின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு பல்வேறு இடையூறுகள் செய்து வந்தனர் என்றும், இந்நிலையில் கடந்த 16.06.2023 ம் தேதியில் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து மனுதாரரின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்தனர் என்றும், எனவே மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(iv) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு சொத்து ஆதியில் மனுதாரர் மற்றும் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் சின்னப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும், மனு சொத்து உட்பட இதர குடும்ப சொத்துக்களை சின்னப்பகவுண்டரும், அவரது வாரிசுகளும் கூட்டாக அனுபவித்து வந்த நிலையில், கடந்த 1974 ம் வருடம் மொத்தம் 4.10 ஏக்கர் நிலம் வாய்மொழி பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றும், அதில் ச.எண்.311/4A4 ல் மனு சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள 0.22 சென்ட் நிலமானது மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையில் 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டவை என்றும், மேற்படி சங்கதிகளை மறைத்து மேற்படி எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டி மோசடியாக தன் பெயரில் பட்டா மாற்றம் செய்ய மனுதாரர் முயன்று வருகிறார் என்றும், மனு சொத்தின் பேரில் உள்ள மனுதாரரின் தனிப்பட்டா சுவாதீனத்தை காண்பிக்க எவ்வித ஆவணங்களும் இல்லை என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(v) 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் சின்னப்பகவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 1974 ம் வருடம் அவரது வாரிசுகளுக்கு பாகம் பிரித்து கொடுத்து தனித்த சுவாதீனமும் கொடுத்துவிட்டார் என்றும், அவ்வாறாக பாகம் பெற்ற அனைவரும் (வாதியை தவிர) நீண்ட நாட்களுக்கு முன்பே 7 ம் எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்து அவர் சுவாதீன அனுபவத்தில் உள்ளார் என்றும், மனுதாரர் மட்டுமே தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் ஒரு பகுதியை 1977 ம் வருடம் விற்பனை செய்துவிட்டும், 3 சென்ட் நிலத்தை பாதைக்காக கொடுத்தும், மீதமுள்ள 22 சென்ட் நிலத்தை தனது சுவாதீனத்தில் வைத்தும் நாளது தேதி வரை அனுபவத்தில் உள்ளார் என்றும், அதனால் தாவா சொத்து மனுதாரருக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், வழக்கை அனுமதிப்பதில் ஆட்சேபனை இல்லை என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(vi) 8 ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனு சொத்து பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்து என்றும், மனுதாரர் கூறுவதுபோல் வாய்மொழி பாகப்பிரிவினை ஏதும் ஏற்படவில்லை என்றும், மனு சொத்தில் மனுதாரருக்கு தனிப்பட்ட சுவாதீனம் இல்லை என்றும், மனு சொத்தின் ஒரு பகுதியை மனுதாரர் மேச்சேரி பஞ்சாயத்திற்கு தானம்

அளித்துள்ளார் என்பதாலேயே மனுசொத்தில் மனுதாரருக்கு தனிப்பட்ட சுவாதீனம் உள்ளது என கூற இயலாது என்றும், 8ம் எதிர்மனுதாரருக்கு மனு சொத்தில் பாகம் உள்ளது என்றும், கூட்டுரிமையாளருக்கு எதிராக மனுதாரருக்கு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பெற இயலாது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(vii) மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையின் அடிப்படையில் நீதிமன்றம் தகுந்த உத்தரவு பிறப்பிக்கலாம் என மேற்குறிப்பு செய்தும், 5 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்தும், 8ம் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும், 8ம் எதிர்மனுதாரர் தன் தரப்பு வழக்கை எடுத்துரைக்க முன் வராததால், 8ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டதாக கருதப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரிலும், இவ்வழக்கு சங்கதிகளை பரிசீலனை செய்கையில், வாதி/மனுதாரரால் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து மனுதாரரின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் 1. 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு சொத்து வாய்மொழி பாகப்பிரிவினையில் தங்களுக்கு பாகமாய் ஒதுக்கப்பட்டது என்றும், 8ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கூறுவதுபோல் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றும், தற்போது மனு சொத்து பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்து என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(viii) மேற்படி இருதரப்பு வாதுரைகளையும் கருத்தில் கொள்கையில், இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் சங்கதி யாதெனில், இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் நபர் வழக்கில் தனக்குள்ள முதல்தோற்ற வழக்கு (Prima facie case), வசதியின் சமநிலை (Balance of convenience), ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable Loss) ஆகியவற்றை நிரூபிக்க வேண்டும் என்பதே ஆகும். அவ்வகையில் மனுதாரர் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு உண்டான முதல் தோற்ற வழக்கை நிரூபித்துள்ளாரா? என்பதை பரிசீலனை செய்கையில், மனுதாரர் இம்மனுவில் தன் முதல்தோற்ற வழக்கை நிரூபிக்கும் வகையில் எவ்வித ஆவணங்களையும் குறியீடு செய்ய முன்வரவில்லை என தெரியவருகிறது.

(ix) இந்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றத்தால், **“(2012) 5 SCC 370, Maria Margarida Sequeira Fernandes v. Erasmo Jace De Sequeira”** என்ற வழக்கில், பத்தி 86 ல், (a) prima facie case; (b) balance of convenience; and (c) irreparable injury; which guide the court in this regard. In the broad category of prima facie case, it is imperative for the court to carefully analyse the pleadings and the documents on record and only on that basis the court must be governed by the prima facie case. In grant and refusal of injunction, pleadings and documents play a vital role...”என்ற சட்டநிலைப்பாட்டை வகுத்துரைத்துள்ளது தெரியவருகிறது. மேற்கண்ட சட்டநிலைப்பாட்டை கருத்தில் கொள்கையில், மனுதாரர் மனுவில் எவ்வித ஆவணங்களையும் தங்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தாத நிலையில், மனுதாரர் தன் முதல்தோற்ற வழக்கை (Prima facie case) நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(x) அடுத்ததாக, மனுதாரர் கோரும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படாவிட்டால், மனுதாரருக்கு எவ்வித ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable Loss) ஏற்படும் என்பது குறித்து மனுதாரர் காண்பித்துள்ளாரா? என்பதை பரிசீலனை செய்கையில், மனு பிரமாணப்பத்திரிக்கை பத்தி 9 ல், "I have got a prima facie case and the balance of convenience lies in my favour." என்றும், இறுதியாக "Otherwise, I will be put into serious loss and hardships." என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது. அதாவது மனு பிரமாணப்பத்திரிக்கையில் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் தனக்கு மிகுந்த இழப்பு மற்றும் சேதாரம் ஏற்படும் என தான் தெரிவிக்கப்பட்டுள்ளதே அன்றி, மேற்படி இழப்பு ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable Loss) என்றோ, அது நஷ்ட ஈட்டுத்தொகையால் ஈடு செய்ய இயலாத ஒன்று என்றோ குறிப்பாக வாதுரைக்கவில்லை என தெரியவருகிறது.

(xi) இந்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றத்தால், **"AIR 2012 SC 2448, Best Sellers Retail India (P) Ltd., vs. Aditya Nirla Nuvo Ltd.,”** என்ற வழக்கில், பத்தி 14 ல், “... the settled principle of law is that even where prima facie case is in favour of the plaintiff, the court will refuse temporary injunction if the injury suffered by the plaintiff on account of refusal of temporary injunction was not irreparable...” என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அதேபோல் மாண்பமை உச்சநீதிமன்றத்தால், **“1992 (1) SCC 719, Dalpat**

**Kumar & Anr. v. Prahlad Singh & Ors.”** என்ற வழக்கில்,

> “Satisfaction that there is a prima facie case by itself is not sufficient to grant injunction. The court further has to satisfy that non-interference by the court would result in “irreparable injury” to the party seeking relief and that there is no other remedy available to the party except one to grant injunction and he needs protection from the consequences of apprehended injury or dispossession. **Irreparable injury, however , does not mean that there must be no physical possibility of repairing the injury, but means only that the injury must be a material one, namely, one that cannot be adequately compensated by way of damages.”**

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(xii) மேற்கண்ட முன்தீர்ப்புகளில் வகுத்துரைக்கப்பட்டுள்ள சட்டநிலைப்பாடுகளை கருத்தில் கொள்கையில், மனுதாரர் தற்போது இம்மனுவில் முதல்தோற்ற வழக்கை (Prima facie case) காண்பிக்காத நிலையிலும், இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால், தனக்கு எவ்வாறு ஈடு செய்ய இயலா இழப்பு (Irreparable loss) ஏற்படும் என்பது குறித்து மனு பிரமாணப்பத்திரிக்கையில் குறிப்பாக எங்கும் வாதுரைக்கவில்லை என்பதையும் கருத்தில் கொள்கையிலும், மனுதாரர் கோரிய இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xiii) அதேபோல் இச்சூழ்நிலையில் மனுதாரர் தாவாவில் கோரியுள்ள உறுத்துக் கட்டளை பரிகாரத்தையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரரால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xiv) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல்

செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xv) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் ***"Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"*** என்ற வழக்கில்,

> "It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில், இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.03.03 11:14:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.03.03 11:14:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.